//மிக அவசரம்//

**நினைவூட்டு**

**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (நாட்டு நலப்பணித்திட்டம்) செயல்முறைகள், சென்னை –600 006.**

**ந.க.எண்: 048001/எம்/இ4/2019, நாள்: 02.07.2021**

பொருள்: பள்ளிக்கல்வி– Fit India Movement–ல் பதிவு செய்த பள்ளிகள் தவிர்த்து மீதமுள்ள அனைத்து வகைப் பள்ளிகளும் Fit India School Certificate, Fit India Flag, Schools with 3 star and 5 star – இணைய தளத்தில் பதிவு செய்து விவரங்களை உள்ளீடு செய்தல் – தொடர்பாக.

பார்வை:

1. Government of India, Ministry of Youth Affairs & Sports, Department of Sports, Shastri Bhavan, New Delhi, F. No. K–15017/7/2019/FIC, dated - 18.11.2019.
2. Under Secretary to Government of India, Ministry of Education, Department of School & literacy, New Delhi, F.No.12–1/2020 (IS–4),Dated 3rd June 2021.
3. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை - 6, ந.க. எண். 050546/எம்/இ4/2019, நாள் : 30.01.2020.
4. இவ்வியக்கக இதே எண்ணிட்ட செயல்முறைகள், கடிதம் நாள் 24.01.2020, 04.02.2020, 18.07.2020 & 09.12.2020.

******

பார்வை 1–இல் காணும் கடிதத்தில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் Fit India Movement சார்பாக www.fitindia.gov.in எனும் இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. பார்வை 3 மற்றும் பார்வை 4– இல் காணும் பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகளின்படி, மேற்காண் இணையதளத்தில் சென்று மாநிலத்திலுள்ள அனைத்து வகைப் பள்ளிகளும் பதிவு (Registration) செய்து Fit India School Certificate (சான்றிதழ்) பெறவேண்டும் என்றும் இதன் தொடர்ச்சியாக, இதே இணையதளத்தில் Fit India சார்ந்த வினாக்களுக்கு பதிலளித்தல் மூலம் Fit India Flag, 3 Star Rating அல்லது 5 Star Rating போன்றவற்றிற்கும் விண்ணப்பிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும், நாளது தேதி வரை குறைந்த அளவிலான பள்ளிகள் மட்டுமே இணையதளத்தில் பதிவேற்றம் செய்திருப்பது ஏற்புடையது அல்ல. எனவே மேற்கண்ட இணையதளத்தில் இதுவரை பதிவேற்றம் செய்யாத பள்ளிகள், உடன் பதிவேற்றம் செய்திடும்பொருட்டு அனைத்து மாவட்ட முதன்மை மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்களும் இப்பணி குறித்து உரிய நடவடிக்கை எடுக்க அனைத்து வகை பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் அறிவுரை வழங்கிடவும், www.fitindia.gov.in என்ற

இணையதளத்தில் 20.07.2021-க்குள் முழுமையாக பதிவு செய்திடவும் மற்றும் அதனை உறுதிபடுத்துமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், இது சார்ந்து அனைத்து வகை பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் இத்தகவலினை தெரிவித்தமைக்கு உடன் ஒப்புதல் கடிதம் அனுப்புமாறும் மற்றும் அனைத்து வகை பள்ளிகளும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதை தொடர்ந்து கண்காணித்து அதன் அறிக்கையினை 20.07.2021 அன்று மாலை 5 மணிக்குள் இவ்வியக்கக மின்னஞ்சல் முகவரிக்கு (msectndse@gmail.com) அனுப்பி வைக்குமாறும் அனைத்து மாவட்ட முதன்மைக் / மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேற்படி பணியில் காலதாமதம் ஏற்படின் அதனை ஆணையரின் நேரடி கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**/இது மிக மிக அவசரம்/**

**இணைப்பு:** Fit India இணையதளத்தில் பதிவேற்றம்
செய்வதற்கான விதிமுறைகள்

இணை இயக்குநர் (நாட்டு நலப்பணித்திட்டம்) 4/4

02/07/2021

**பெறுநர்:**

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.

**நகல்:**

அரசு முதன்மைச் செயலாளர்,
பள்ளிக் கல்வித்துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.– அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

# Steps to be followed for Applying Fit India School Certification

**Step:1**

Go to this website: http://fitindia.gov.in/

**Step:2**

Then Click **"LOGIN/REGISTER"** icon in the Top Right side corner

**Step:3**

Then another Dialogue box appear then Click **"CREATE AN ACCOUNT"**

**Step:4**

Then register with your **School Name, e-Mail id and password**

**Step:5**

After getting into your Page then **Update your Profile**

**Step:6**

After then Apply for **"Fit India School Certification"**